ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2282/54 - 2022 ජුනි මස 01 වැනි බදාදා - 2022.06.01

2282/54 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு யூன் மாதம் 01 ஆந் திகதி புதன்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**1973 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க விளையாட்டுக்கள் சட்டம்**

*1973 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க விளையாட்டுக்கள் சட்டத்தின் 31 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 41 ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட கட்டளைகள்.*

**ரொஷான் ரணசிங்க (பா.உ.),**
விளையாட்டுத்துறை மற்றும்
இளைஞர் விவகார அமைச்சர்.

கொழும்பு,
*2022, மே 26.*

**கட்டளைகள்**

முன்னர் திருத்தஞ் செய்யப்பட்ட 2016 ஆம் ஆண்டின் ஒற்றோபர் மாதம் 27 ஆந் திகதிய 1990/ 23 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2016 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க தேசிய விளையாட்டுச் சங்கங்களது ஒழுங்குவிதியானது கீழே காட்டப்பட்டுள்ள விதத்தில் 2022 ஆம் ஆண்டிற்கு ஏற்புடையதாக மாத்திரம் இவ்வண்ணம் திருத்தஞ் செய்யப்படுகின்றது.

01. 2016 ஆம் ஆண்டின் ஒற்றோபர் மாதம் 27 ஆந் திகதிய 1990/23 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் III ஆம் அட்டவணையின் தேசிய விளையாட்டுச் சங்கங்களின்/சம்மேளனங்களின் அமைப்பு விதியின் ஏற்பாடுகளின் கீழ் (அ) ஆம் பந்தியில் மே மாதம் முப்பத்தோராம் திகதி எனும் பதத்தினை நீக்கி ஓகத்து மாதம் முப்பத்தோராம் திகதி எனும் பதத்தினைப் பதிலீடு செய்வதன் வாயிலாக,

02. 2023 ஆம் ஆண்டு சனவரி மாதம் முதலாம் திகதியிலிருந்து மீண்டும் 2016 ஆம் ஆண்டின் ஒற்றோபர் மாதம் 27 ஆந் திகதிய 1990/23 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் III ஆம் அட்டவணையில் தேசிய விளையாட்டுச் சங்கங்களின்/சம்மேளனங்களின் அமைப்பு விதிக்கு ஏற்புடைய ஏற்பாடுகளின் கீழ் (அ) ஆம் பந்தியானது மீண்டும் செல்லுபடியானதாகும்.

EOG 6 - 0028

1A - G 36873 — 08 (2022/06) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.